**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.351/2022 P.W.7**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | விஜயா | க–பெ | ஆனந்தன் |
| ஊர்: | : | வடக்குடி | சமயம்: | |
| வயது: | : | 55/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.08.2025**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் வடக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 05.10.2015 அன்று எனது மாமனார் முத்தையா என்ற காளி சைக்கிளில் மனசை பேருந்து நிறுத்தம் வழியாக சென்று கொண்டிருந்தபோது காலை 11.00 மணியளவில் டாடா எஸ் வாகனம் அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டதாகவும் சிகிச்சையில் அரசு மருத்துவமனை காரைக்குடியில் இருப்பதாகவும் தெரிந்து கொண்டு அங்கு சென்று அவரை நான் பார்த்தேன். பின்னர் மதுரை அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அவரை அழைத்து சென்றோம். அன்றுமாலை 4.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி அவர் உயிர் இழந்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். இறந்தவர் எனது மாமனார் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.08.21 15:31:23 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி